தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1982 பிப்ரவரி 12

தை 30 துன்மதி, திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

''ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்து ஓம்பல் சொல்லின்கண் சோர்வு''.

நன்மை பயக்கும் வாழ்க்கைச் சிறப்புகளும் தீமை உண்டாக்கும் கேடுகளும் சொல் ஆற்றலாலேயே உண்டாகின்றன. எனவே, ஒன்றைச் சொல்லும் பொழுது தவறு உண்டாகாமல், கருத்தாகச் சொற்களைப் பயன்படுத்துக.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மலைப் பகுதியில் மீன்காட்சி சாலை அருங்காட்சி சாலை அமைக்கும் திட்டம்

* வினா எண் 161—திரு. மெ. ஆண்டிஅம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மலைப்பகுதியில் மீன்காட்சிசாலை, அரும் பொருட்காட்சி நிலையம் அமைக்க மத்திய அரசிடமிருந்து நிதி உதவி அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தில் ஒரு மீன்காட்சி மற்றும் அரும்பொருட்காட்சி சாலை நிறுவ இதுவரை ரூ. 2,68,000 அளிக்கப்பட்டுள்ளது. இந்த மீன் காட்சி மற்றும் அரும்பொருட்காட்சி நிலையம் 18.10.81 முதல் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, கடலிலே வாழ்கின்ற மீனைக் கொண்டுபோய் மலைப்பகுதியில் கண்காட்சியாக வைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, மீனை எங்கெங்கே பார்க்க வசதியற்று வாழ்கிறார்களோ அங்கே எல்லாம் இந்த மீன்களைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய கண்காட்சிகள் அமைக்கப்படுகின்றன. மேலும் உதகமண்டலம் ஒரு சுற்றுலா கேந்திரமாக இருப்பதால், அங்கே பல நாட்டவரும் வந்து பொழுது போக்குகின்ற காரணத்தாலும் இப்படிப்பட்ட கண்காட்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. சென்னையிலே கூட கடற்கரையிலே இப்படிப்பட்ட ஒரு கண்காட்சி இருக்கின்றது. இந்த சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பயன்படுகின்ற வகையிலே, இந்த நாட்டு மீன்கள் மட்டுமல்லாமல் பல நாட்டு மீன்களையும் வண்ண வண்ண மீன்களையும் காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள்.

திரு. என். பழனிவேல்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மீன் கண்காட்சிசாலைகள் சுற்றுலாப் பகுதிகளில் இருக்கக்கூடிய வகையிலே வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்றைக்குக் கொடைக்கானல் ஒரு சிறந்த சுற்றுலா மையமாக திகழ்கின்ற காரணத்தால் அங்கேயும் இது மாதிரி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா பகுதிகள் அத்தனைக்கும் வைக்கப்படும் என்று குறிப்பு இருப்பதாக நான் சொல்லவில்லை. உதகமண்டலம் ஒரு சுற்றுலா இடமாக இருப்பதன் காரணமாக இந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று கொடைக்கானலும் இதுபோன்ற கண்காட்சி வைப்பதற்கு ஏற்ற இடம்தான். அதைப் பற்றிச் செயற்குறிப்பு இல்லை. யோசிக்கலாம்.

திரு. செ. செம்மலை: துணைத் தலைவர் அவர்களே. இந்த அரும்பொருள் காட்சி நிலையம் சேலம் மாவட்டத்தில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாவட்டம் தோரும் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு செயற்குறிப்பு கல்வித் துறையிலே இருக்கிறது.

1981-1982ல் கொள்முதல் செய்யவிருக்கும் அரிசி, நெல் அளவு

*வினா எண். 162— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நடப்பாண்டில் (1981-1982ல்) கொள்முதல் செய்ய இருக்கும் அரிசி எவ்வளவு?

(ஆ) கொள்முதல் செய்ய உத்தேசித்திருக்கும் நெல் அளவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ)&(ஆ) நடப்பாண்டில் ஆறு இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்ய வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது இதை அடைவதற்கு அரசு தீவிரமாக கொள்முதல் செய்து வருகிறது.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, கொள்முதல் வெற்றிகரமாக நடப்பதற்கு இடையூறாக இருப்பது கொள்முதல் விலைதான். இந்த சர்க்கார், மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையை விட கூடுதலாக கொடுக்குமா என்று கேட்டபோது, மாண்புமிகு முன்னவர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சொன்ன பதில் மத்திய அரசு சொன்னதற்கு மீறிப்போனால், பிளாக் லிஸ்ட் பண்ணி